# வேலணை மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதான புனரமைப்பு

எமது கல்லூரியின் மாணவர் முன்னேற்றத்திற்காக எமது சங்கமும் பிரான்ஸ் இங்கிலாந்து அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள எமது சகோதர சங்கங்களும் எமக்குள் பரஸ்பர புரிந்துணர்வுடனும் நேர்த்தியான தகவல் பரிமாற்றத்துடனும் பற்பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை யாவரும் அறிந்ததே. மாணவர் நலன்சார் விடயங்கள் கல்வி விருத்தி கல்வி நிறுவன விருத்தி எனப் பல வடிவங்களில் மாணவர்களுக்கான செயற்திட்டங்கள் எம்மாலும் எமது சகோதர சங்கங்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் அடுத்த கட்டமாக மாணவர்களின் உடற்கல்வியின் முக்கியத்திலும் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாகவுள்ளோம்.

விளையாட்டு என்பது வெறும் விளையாட்டான விடயமல்ல. உடற்கல்வி என அதுவும் கல்வியின் ஒரு பகுதியே. அண்மைக்காலத்தில் எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை வீழ்ச்சியடைந்திருப்பது மிகவும் கவலைதரும் விடயமாகும். ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு மைதானம் இன்மை உடற்கல்வி ஆசிரியர் பற்றாக்குறை என்பன கல்லூரி நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படும் குறைகளாக உள்ளன.

இதனைச் சீர்செய்யும் செயற்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கல்லூரி நிர்வாகம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்துள்ளது.

கல்லூரியின் கட்டட விஸ்தரிப்புக் காரணமாக எமது கல்லூரியின் விளையாட்டு மைதானம் மாணவர் விடுதிகளுக்கு முன்பாகவுள்ள காணிகளுக்கு இடம் மாற்றப்பட்டமை நீங்கள் யாவரும் அறிந்ததே. இம்மைதானத்தினை விரிவுபடுத்துவதற்காக அதன் அயலிலுள்ள கிட்டத்தட்ட 40 பரப்பளவுள்ள 3 காணிகள் வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-பிரான்ஸினால் கொள்வனவு செய்யப்பட்டுத் தற்போது மைதானம் போதிய இடப்பரப்புக் கொண்டதாக ஆக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இம்மைதானம் போதிய பராமரிப்பின்மையாலும் பாதுகாப்பு வேலி அமைக்கப்படாமையாலும் இயற்கையினாலும் செயற்கையாக உருவாகும் இடர்பாடுகளாலும் ஓர் விளையாட்டு மைதானத்திற்குரிய எதுவித தகமையுமில்லாமல் கட்டாந்தரை போன்றும் கால்நடைகள் மேயும் மேய்ச்சல் நிலம் போன்றும் காணப்படுகின்ற அவலநிலைக்குள் இருக்கின்றமை கல்லூரியின்பால் அன்பும் அக்கறையும் கொண்டிருக்கும் அனைவரையும் வருத்தத்தில் ஆழ்த்துகின்ற விடயமாகும்.




இவ்விளையாட்டு மைதானத்தின் நிலத்தினைச் செப்பனிட்டுப் பாதுகாப்பு வேலியிட்டு மைதானத்தினை மறுசீரமைப்புச் செய்து மாணவரின் விளையாட்டுத் துறை மேம்பாட்டிற்கு வழி சமைக்கும் உன்னத பணியினை எமது சகோதர சங்கங்களில் ஒன்றான வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-பிரான்ஸ் பொறுப்பேற்று 2016ம் ஆண்டின் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்திக் கல்லூரியின் தரத்தை உயர்த்த முன்வந்துள்ளமையை எமது சங்கத்தின் சார்பில் பாராட்டுவதோடு கனடா வாழ் பழைய மாணவர்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இத்திட்டத்திற்கான வரைபடம் அருகில் உள்ளது.

ஒளிரும் நிகழ்காலம் மிளிரும் வருங்காலம்

தழைக்கட்டும் கல்லூரி செழிக்கட்டும் மாணவர்கள்

தொடரட்டும் மேம்பாடு வளரட்டும் தீவகம்

**சி. இளஞ்செழியன் (தலைவர்)**

வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா